# வரவுசெலவுத் திட்ட உரை - 2015

**கௌரவ தலைவர் அவர்களே,**

**கௌரவ அமைச்சர்களே,**

**கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே,**

**கௌரவ உறுப்பினர்களே,**

## முதலாம் பகுதி

மத்திய மாகாணத்தின் ஆறாவது மாகாண சபையின் இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தை முன்வைக்கும் இத்தருணத்தில் பங்கு கொள்ளும் உங்கள் அனைவரையும் மிகவும் கௌரவமாக வரவேற்கின்றேன்.

''இன்றைய தினத்தில் விதைக்கும் அனைத்தும் எதிர்காலச் சந்ததியினரின் நலனுக்காகவாகும். எனவே, இன்றுபோல் நாளையும் நாட்டின் நிலைப்பும் மகிமையும் பாதுகாக்கப்படும் என்பது நிச்சயமே''

மகிந்த சிந்தனையின் முன்னோக்கு அபிவிருத்தி முன்மொழிவுகளிலிருந்து மேற்காட்டிய மேற்கோள் பெறப்பட்டது. இந்தக் கூற்று எவ்வளவு ஆழமானது என்பதில் இந்த கௌரவ சபையில் இருக்கும் உங்கள் அனைவரது கவனத்தையும் ஈர்க்கச் செய்கின்றேன். இவ்வாறான கருத்தொன்றை முதலில் வெளியிட்டவர், அனைத்து பிரிவுகளுக்கும் மிகவும் தீர்க்கமான வரவுசெலவுத் திட்டத்தைக் கடந்த 24 ஆம் திகதி நிதியமைச்சர் என்ற வகையில் பாராளுமன்றத்தில் முன்வைத்த கௌரவ மகிந்த ராஜபக்ஸ அவர்கள்.

அந்த வரவுசெலவுத் திட்டம் சமத்துவம், அவகாசம், உற்சாகம், தன்மகிமை என்பவற்றை ஒன்றாக்கிய வெளியீடாகும். தேசத்தை உயர்த்தி வைத்து, உறுதியான பொருளாதார வேலைத்திட்டத்தின் பேரொலியை இடைவிடாது முன்னெடுத்துச் செல்லும் பயணத்தை மேலும் உரமூட்டும் வரவுசெலவுத் திட்டம் இதுவாகும். இவ்வாறானதொரு உரையை நாட்டு மக்களிடையே முன்வைத்த அவருக்கு மலைநாட்டு மக்களது பிரதிநிதிகள் என்ற வகையில்

உங்கள் அனைவர் சார்பிலும் எனது கௌரவமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாட்டினதும் நாட்டு மக்களதும் மிகவும் தீர்க்கமான காலகட்டத்துக்குள் நாம் பிரவேசித்துள்ளோம். நாட்டின் அரச தலைவர் என்ற வகையில் அதிமேதகு சனாதிபதியின் இரண்டாவது பதவிக் காலத்தின் நான்காவது வருடம் நிறைவடைய இன்னும் சில நாட்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. அவரது இந்த பதவிக்காலம் முழுவதும் சவால்களால் நிறைந்தது என்பதை நாம் மறக்க இயலாது. போரின் உச்சக்கட்ட நிலையில், அதற்கான சரியான தலைமைத்துவம் மற்றும் நேரடித் தீர்மானங்களுடன் நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்றும் பலத்த தேவைப்பாட்டுடன் இராணுவத்தின் தலைமையுடன் பாதுகாப்புப் படைகள் அனைத்துக்கும் புதிய பலத்தையும், சக்தியையும் வழங்கிக் குறுகிய காலத்துக்குள் உலகின் மூர்க்கமான பயங்கரவாத இயக்கத்தையும் அதன் தலைவரையும் அழித்து நாட்டுக்கு இரண்டாவது சுதந்திரத்தை வழங்க அவரது போர்த் தன்மைக்கு முடிந்துள்ளது. போரில் வெற்றிகிடைக்கும் வரை நிதி ஒதுக்கீட்டின்போது இராணுவத் தேவைகளுக்கும், வெற்றியின் பின்னர் போரினால் அழிவுக்கு உட்பட்ட மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவரும் எண்ணத்துடன், அழிவுக்கு உட்பட்ட வீடுகள், நகரங்களைக் கட்டியெழுப்புவதில் பெரும் சுமையை ஏற்கவேண்டி இருந்தது. வருடா வருடம் வடக்கு கிழக்கின் அபிவிருத்திக்குச் சமமாக நாட்டின் எத்திசையிலும் பாரிய அபிவிருத்தித திட்டங்களை ஆரம்பிக்க அடித்தளமிடப்பட்டது. மத்திய மாகாணத்திலும் மேல் கொத்மலை மின்நிலையம், மொரகஹகந்த திட்டம், தெல்தெனிய விமான நிலையம் உள்ளிட்ட இரண்டு செயற்றிட்டங்களுக்கான ஆரம்பம் நிகழ்ந்தது. நிறைவு பெற்றது. கிடைத்தது. கிடைக்கின்றது.

மேலும், வடக்கு – தெற்கை இணைத்து அதிவேகப் பாதைகள் அமைக்கப்பட்டன. 24 வருடங்கள் செயலற்றிருந்த "யாழ்தேவி"யை மீண்டும் நட்புறவுப் பயணத்தில் சேர்க்க முடிந்தது. மேலும், விமான நிலையம் துறைமுகம், சர்வதேச மாநாட்டு மண்டபம், நாடக மண்டபம், விளையாட்டரங்கம், சுற்றுலா நகரம், ஹோட்டல்கள், கைத்தொழில்கள், நகரங்கள் போன்ற பல பாரிய திட்டங்கள் மூலம் இவற்றின் நன்மைகளை

நாட்டுக்கு வழங்க முடிந்தது. இவற்றின் பாரிய முன்னெடுப்பு எதிர்வரும் 14 – 15 என்ற இரண்டு நாட்களுள் நிகழும். வடக்கின் அதிவேகப் பாதைகளின் முதற்கட்ட ஆரம்பம் அதுவாகும். அதன் பெறுபேற்றை மலையக மக்களே பெறவுள்ளனர்.

மாகம் ருகுணுபுரம் மட்டுமன்றி கிழக்கு, வடக்கு, வடமேல், மத்திய, சப்பிரகமுவ போன்ற ஒவ்வொரு மாகாணமும் எவரும் நினைத்திராத, நம்பியிராத துரித அபிவிருத்திப் பாதையில் செல்ல வைக்கப்பட்டன. இலங்கை ஒரு நாடு என்ற வகையில் தனது அபிவிருத்தியை நிலையாகப் பேணி, நன்னிலையை உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டது. 3800 அமெரிக்க டொலராக உயர்ந்து சென்ற தனியாள் வருமானத்துடன் பசுமைச் சுற்றாடலையும், மனங்கவர் சூழலையும், அதிசிறந்த சுகாதார சேவையையும் பெற இலகுவாக வழி வகுக்கப்பட்டது. மேலும், சுத்தமான குடிநீர், மின்வசதி நிறைந்த உயர்ந்த வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. விழுமியங்களைப் பாதுகாத்து கலாசார வரலாற்று மரபுரிமைகளைப் பாதுகாக்கும், முதியோரை மதிக்கும், வலது குறைந்தோரும் சமூகத்தில் ஒரு அங்கம் தான் என்ற எண்ணமுள்ள மக்கட் பிரிவினருக்கான பின்னணி ஏற்படுத்தப்பட்டது. நாட்டினதும் மக்களதும் சந்துஷ்டி என்பது பலம் வாய்ந்த ஆசீர்வாதமாகும். இவை குறைவின்றிக் கிடைத்துத் தனியாள் வருமானத்தை 8500 அமெரிக்க டொலாக ஆக்கும் பயணத்தை மேலும் வலுவூட்டுவதன் ஆரம்பப் படியாக 2015 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தை விபரிக்க முடியும். இதன் பெறுபேறுகள் மாகாண சபை என்ற வகையில் எமக்கு முக்கியமானது என்பதைப் போன்றே இதற்கு உறுதுணையாக நிற்கும் நிருவாக சேவை அலுவலர்கள் முதல் அனைத்துக் கருமங்களிலும் உதவும் அனைவருக்கும், சிரேட்ட பிரசைகளுக்கும் வரம் கிடைத்துள்ளதைப் போன்றே முன்னர் வரவு செலவுத் திட்டங்களில் ஒதுக்கப்படாத பாரிய தொகை நிதியை மாகாண அபிவிருத்திக்கெனப் பயன்படுத்த அவகாசம் கிட்டியுள்ளது. இந்தப் பாரிய நிதியை உயர் அபிவிருத்திக்கென எமது மாகாணத்தின் கிராமங்களுக்கு எடுத்துச் செல்ல மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் உங்களுக்குக் கிடைப்பது என்ற செய்தி எவ்வளவு மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது? இப்போது எமது பொறுப்பு, முறையாகத் திட்டமிட்டு மக்கள் நலன் பெற வைப்பதல்லவா?

**கௌரவ தலைவர் அவர்களே,**

விசேடமாக அதிமேதகு சனாதிபதி இவ்வாண்டு முன்வைத்த வரவுசெலவுத் திட்ட உரை வரலாற்று முக்கியத்துவமானது என்பது, நான் இன்று இந்த கௌரவ சபையில் முன்வைக்கும் வரவுசெலவுத் திட்டத்துகான ஆசீர்வாதம் என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். 15 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமான எனது அரசியல் வாழ்க்கையின் முக்கியமான திருப்புமுனைக்கு வந்துள்ளேன் என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். மத்திய மாகாண சபையின் வரலாற்றில் அதிக காலம் முதலமைச்சாராகப் பணியாற்றிய பாக்கியத்தைப் பெற்றவன் என்ற வகையில், 10 வரவுசெலவுத் திட்டங்களைச் சபையில் முன்வைத்துள்ளேன் என்பதை அடக்கமாகக் குறிப்பிடுவதில் பெருமையடைகின்றேன். மாகாண சபைக்குக் கிடைக்கும் நிதியினை உரிய வகையில் பகிர்ந்தளித்து கல்வி, சுகாதாரம், பாதைகள், விவசாயம், கைத்தொழில் உள்ளிட்ட எல்லாத் துறைகளுக்கெனவும் புதிய திட்டங்கள் பலவற்றை அறிமுகம் செய்து ஏனைய மாகாணங்களை மிஞ்சும் விதத்தில் முன்மாதிரியான திட்டங்களை முன்னெடுக்க முடிந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விசேடமாக இந்தத் தடவை வரவுசெலவுத் திட்டம் இந்தப் புதிய சபையின் நடுவே முதலில் மாகாணத்துக்கு முன்வைக்கும் பாக்கியத்தையும் நான் பெற்றுள்ளேன். மாகாணத்தின் கிராமிய, நகர மட்டத்தில் அபிவிருத்திகளும் நிருவாகத்துக்கும் எனப் பாரிய நிதியைப் பெற்றுத்தர இயன்றமை மூலம் அவை உரிய வகையில் நகருக்கு நகர், ஊருக்கு ஊர், வீட்டுக்கு வீடு மக்களைச் சென்றடைந்து அவற்றின் பயன்களை அவர்கள் அனுபவிக்கச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது எனக் குறிப்பிடுகின்றேன். கடந்த சில தினங்களில் அதிமேதகு சனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அவர்களால் செய்யப்பட்ட உரையிலிருந்து சிலவற்றை மீண்டும் எடுத்துக்காட்டி, வரவுசெலவுத் திட்டத்தை முன்வைக்க எதிர்பார்க்கின்றேன்.

‘‘பயன்தரும் சேவையை வழங்கி அதன் மூலம் வாழ்க்கைக்கு வலு’’ என்பதைக் கருப்பொருளாகக் கொண்ட உள்ளூராட்சி மாநாடு மற்றும் ஸ்வர்ணபுரவர விருது விழா.

‘‘அபிவிருத்தியிலும் மக்கள் சேவையிலும் அரசியல் கொள்கைகள் உண்டாக இயலாது. பொது சேவைகளை வழங்க நாம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்’’

‘‘இப்போது எமக்கு வேண்டியது மக்களது இதயத் துடிப்பை இனங்கண்டு மக்களது தேவைகள் பற்றிய விழிப்புடன் இருக்கும் பிரதிநிதிகள். இதுவரை இந்த நாட்டின் மக்களதும் உலகத்தினதும் விருப்புக்கள், சிந்தனைகள் பெருமளவில் மாற்றம் பெற்றுள்ளன. மாறி வருகின்றது. அந்த உலகத்துடன் நாமும் மாற்றம் பெற்று முன்னேறிச் செல்ல வேண்டும்’’

5000 கிராம அலுவலர்கள் மத்தியில் அதிமேதகு சனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அவர்கள் ஆற்றிய உரை.

வலது குறைந்த பிள்ளைகள் முதல் ஓய்வூதியம் பெறுவோர் வரை வீட்டுக்கே பயன்கள் கிடைக்கும் வண்ணம் வரவுசெலவுத் திட்டத்தை முன்வைக்க முடிந்தமைக்கான காரணம் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்து 4 வருடங்கள் அபிவிருத்தியின் பயன்களை மக்களிடையே முன்வைக்க முடிந்ததாகும்’’

அரச சேவைய வலுவூட்டி, வசதிகளை அதிகரிக்கவும், மக்களுக்குத் தகவுத்திறன் கொண்ட சேவை வழங்கும் நோக்கில், எமது முன்னிலையில் வரும், கண் கலங்கிநிற்கும் நாதியற்ற மக்களது கண்ணீரைத் துடைத்து அவர்களைச் சிரித்த முகத்துடன் திருப்பியனுப்பும் பொறுப்பு அரச ஊழியர்களாகிய உங்களது பொறுப்பாகும்’’

2015 வரவுசெலவுத் திட்டம் செய்றபடும்போது நிருவாக அலுவலர்களது கடமைக்கூறு செயலமர்வு

‘‘எமது வரவுசெலவுத் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள நன்மைகளை உரிய வகையில் மக்கள் கைகளில் அடையச் செய்ய அரச அலுவலர்களுக்கே முடியும். இந்த வரவுசெலவுத் திட்டம் குளிரூட்டிய அறையிலிருந்து செய்யப்பட்டதல்ல. அது மக்களுக்கு அருகில் சென்று மக்களது கருத்துக்களைக் கேட்டறிந்து செய்யப்பட்டதாகும். எனவே, இதில் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் கோரிக்கைகளை வழங்க, பொதுமக்களது

தேவைகளை வழங்க உங்களது அதியுயர் அர்ப்பணிப்பு தேவைப் படுகின்றது''

கல்வித்துறையின் நிருவாக அலுவலர்கள் மற்றும் அதிபர்களது சந்திப்பு

10 வருடங்களாக மேற்கொண்ட அபிவிருத்தி, பொருளாதார முகாமை என்பவற்றின் மூலம் இலாபப் பங்கீடு செய்வதற்கு முடிந்த வரவுசெலவுத் திட்டம். அறிவை அடிப்படையாகக் கொண்டு இதன் நன்மைகளைப் பிள்ளைகளுக்கு வழங்க முடிவது, பிள்ளைகளுக்குப் புதிய உலகொன்றைக் காட்டும் உங்களால் தான். இந்த எல்லா வளங்களதும் நன்மைகளைப் பிள்ளைகளுக்கு வழங்குங்கள்.

வருடாவருடம் படிப்படியாக வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையைக் குறைத்துக் குறைத்து அபிவிருத்தியின் நன்மைகளை உயர்ந்த அளவில் மக்களிடையே சென்றடைவதில் அரச தலைவரிடமுள்ள உண்மையான தேவையைக் காட்டுவதற்காகவே இந்த உரைகளை நான் மேற்கோளாகக் காட்டினேன்.

இவை அனைத்தையும் நன்கு படிக்கும் எவருக்கும் இந்த வரவுசெலவுத் திட்டம் மக்களுக்குக் ''கவலை தரும் ஒன்றா அல்லது நாம் நம்பும் வண்ணம் மக்களுக்கு ''நலம் தரும்'' வரவுசெலவுத் திட்டமா என்று விளங்கிக்கொள்ள முடியும்.

**கௌரவ தலைவர் அவர்களே,**

தீர்ப்பை நாட்டினிடம் பொறுப்பாக்கி, இந்த கௌரவ சபையின் முன்னால் வரவுசெலவுத் திட்டத்தை முன்வைக்க அனுமதி கோருகின்றேன்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அவர்கள் 2015 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத் திட்டத்தை 2014 ஒற்றோபர் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைத்து, நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான ஏராளமான முன்மொழிவுகளையும்,

பொதுமக்களது நலன் கருதிய ஏராளமான முன்மொழிவுகளையும் முன்வைத்துள்ளார். அந்த முன்மொழிவுகளுள் எமது மாகாணத்தின் முன்னேற்றம் கருதி மிக முக்கியமான பல முன்மொழிவுகளையும் உள்ளடக்கியுள்ளார்.

**கௌரவ தலைவர் அவர்களே,**

நடுவண் அரசின் ஒதுக்கீடுகள் மற்றும் நெடுஞ்சாலைகள் எழுச்சி, நகர் எழுச்சி, வாழ்வின் எழுச்சி, ஒரு ஊருக்கு ஒரு வேலை, மலையக நவோதயம் போன்ற ஏராளமான வேலைத்திட்டங்களின் கீழ் மில்லியன் கணக்கில் ரூபாவை எமது மாகாணத்தில் முதலீடு செய்து பாதைகள், பாலங்கள், உள்ளூராட்சி அமையங்களது ஏராளமான அபிவிருத்தி நடவடிக்கைகள் இந்த வருடத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இந்த செயற்றிட்டங்களின் நன்மைகள் அரசாங்க, எதிர்க்கட்சியின் பேதமின்றி, ஒவ்வொரு மக்கட் பிரிவினருக்கும் கிடைக்கின்றது. அது மட்டுமன்றி, எமது மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் மூலமும் பல்வேறு நன்மைகள் வழங்கப்படட்டுள்ளன.

**கௌரவ தலைவர் அவர்களே,**

கடந்த சில வருடங்களுக்குள் எமது மாகாண சபை மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மூலம் ஈட்டப்பட்ட பெறுபேறுகளில் சிலவற்றை உங்கள் முன்வைக்க எண்ணுகின்றேன்.

மத்திய மாகாணத்தில் விவசாயத்தைக் கட்டியெழுப்புவதற்கென விவசாயிகளைப் பயிற்றுவித்தல், ஆலோசனை வழங்குதல், விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களைப் பிரபலியப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளின் பெறுபேறாக 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையுள்ள காலத்துடன் ஒப்பிடுகையில், விசேட முன்னேற்றம் ஒன்றைக் காண முடிகின்றது. இக்காலத்துக்குள் விதை நெல்லின் உற்பத்தி 48,000 புசலில் இருந்து 50,000 வரையும், விதை உருளைக் கிழங்கின் அளவு 240 மெற்றிக் தொன்னிலிருந்து 262 வரையும், பெரிய வெங்காய விதைகளின் அளவு 15,000 கி.கிராமிலிருந்து 17,500 வரையும், விதை போஞ்சியின் அளவு 150 கி.கிராமிலிருந்து 200 வரையும் அதிகரிக்கப்பட்டு விவசாயிகளிடையே

பகிர்ந்தளிக்க முடிந்துள்ளது. இந்த அளவை 2015 ஆம் ஆண்டில் மேலும் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகளது வருமானம் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளமை எமது மகிழ்ச்சிக்கான காரணமாக உள்ளது.

மேலும், பாலுற்பத்தியிலும் மத்திய மாகாணம் முதலிடம் பெறுகின்றது. 2010 ஆம் ஆண்டில் 59.13 மில்லியன் லீற்றராக இருந்த பாலுற்பத்தி 2013 ஆம் ஆண்டளவில் 78.84 மில்லியன் லீற்றர் வரை உயர்ந்துள்ளது. இதற்கான காரணம் நல்லினப் பாற்பசுக்களைப் பகிர்ந்தளித்தமை, உயர் ரக மேய்ச்சல் புல்லினங்களின் பயன்பாட்டை அறிமுகப்படுத்தியமை மற்றும் செயற்கைச் சினைப்படுத்தலைப் பிரபலியப்படுத்தியமை உள்ளிடட பல்வேறு வேலைத் திட்டங்களைச் செயற்படுத்தியமை என்பனவாகும். இந்தச் செயற்பாடுகளை மேலும் முன்னெடுத்துவர உத்தேசிக்கப்பட்டள்ளதுடன், பசுக்களின் உற்பத்தி இயலுமையை அதிகரிப்பதன் மூலம் 2016 இல் பாலுற்பத்தியை 101 மில்லியன் லீற்றர் வரை உயர்த்திக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாகாணத்தின் நெசவு நிலையங்களது அபிவிருத்தியைப் போன்றே துணி உற்பத்தியிலும் புதிய உற்பத்திகளை அறிமுகம் செய்யவும், அந்த உற்பத்திகளின் தேசிய நுகர்வை அதிகரிக்கவும், வெளிநாட்டவருக்கு விற்பனை செய்யவும், வசதிகள் வழங்கவும் எம்மால் முடிந்துள்ளது.

**கௌரவ தலைவர் அவர்களே,**

மாகாணத்தில் வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு வேலைகளைப் பெற்றுக்கொள்வதற்கான தொழிற் பயிற்சிகளை வழங்கி, அவர்களைத் தொழிலில் ஈடுபடுத்தவும், சுயதொழில்களைச் செய்வதற்காக அவர்களுக்குத் தேவைப்பட்ட தையல் இயந்திரங்கள், தச்சுத்தொழில் உபகரணங்கள் போன்றவற்றை வழங்கி அவர்களை ஊக்குவிக்கவும் முடிந்ததுடன், இவ்வாறான 4360 இற்கும் அதிகமான இளைஞர் யுவதிகளை வலுவூட்டவும் முடிந்துள்ளது. அது மட்டுமன்றி, மாகாணத்தின் சமயத்தலங்கள், நலன்புரி மன்றங்கள், மரணாதாரச் சங்கங்கள் போன்ற சமூகசேவை அமையங்களுக்குத் தேவையான உபகரணங்களும் வசதிகளும் வழங்கிக் கிராமிய மக்களது சமூகத் தேவைகளையும் நிறைவேற்ற முடிந்துள்ளது.

கல்வி அபிவிருத்திக்கென நாம் மேற்கொண்ட கருமங்கள் அளப்பரியன. அவற்றில், ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்து, வெற்றிடம் நிலவும் பாடசாலைகளில் இணைப்புச் செய்தமை, ஆசிரியர்களது சம்பள நிலுவைகளைக் கணிப்பிட்டு அவற்றை வழங்கியமை, பிள்ளைகளுக்கு உயர்ந்த சேவைகளை வழங்குவதற்கென ஆசிரியர்களதும், அதிபர்களதும் அறிவு விருத்திக்கான பயிற்சித் திட்டங்களைச் செயற்படுத்தியமை, பாடசாலைகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கியமை போன்றன குறிப்பிடத்தக்கவை. மேலும், ஒவ்வொரு பாடசாலைக்கும் கணினிகளை வழங்கிப் பிள்ளைகளது தகவற் தொழினுட்ப அறிவை விருத்தி செய்வதற்கும் முடிந்துள்ளது. அத்துடன், சுகாதார சேவையை உச்ச மட்டத்தில் பொதுமக்களுக்கு வழங்குவதற்கென மருத்துவ மனைகளுக்குத் தேவையான உபகரணங்கள், கட்டட வசதிகள் வழங்கவும், தொற்றாத நோய்களைத் தடுத்துக்கொள்வதற்காக மக்களை அறிவூட்டம் செய்யவும் முடிந்துள்ளது. தொற்று நோய்களது பரவுதலைக் குறைத்துக் கொள்வதற்கென நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பெறுபேறாக இந்த வருடத்துக்குள் டெங்கு நோய் காரணமாக இறப்புகள் எதுவும் பதியப்படவில்லை. மேலும், தெல்தெனிய ஆதார மருத்துவ மனையை மிக உயர்ந்த மட்டத்தில் விருத்தி செய்யும் வேலைகள் கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. அதன் மூலம் நகரை நோக்கி வரும் நோயாளர்களது எண்ணிக்கை குறைவடைந்து மக்களுக்கு உயர் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**கௌரவ தலைவர் அவர்களே,**

மாகாண சபைக்குரிய சீ தரத்தின் 1,665.12 கி.மீ. பாதைகளும், டி தரத்தின் 578.73 கி.மீ. பாதைகளும் என 2,243.85 கி.மீ. பாதைகள் உண்டு. இவற்றில் மிக உயர்ந்த நிலையில் 1,067.85 கிமீ. பாதையும், பராமரிக்க முடியுமான நிலையில் 518.66 கி.மீ. பாதையும், பழுதடைந்த நிலையில் 657.34 கி.மீ. பாதையும் உள்ளது. நல்ல நிலையில் உள்ள 837 கி.மீ. பாதைகள் காப்பற் இடப்பட்டுள்ளதுடன், 230.85 கி.மீ. பாதைகள் மெட்டல் கல் பரப்பித் தார் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய மேலும் 1,176 கி.மீ. பாதைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

## தகவல் தொழினுட்ப அபிவிருத்தி

மக்கள் நலன் கொண்ட அரச சேவையை ஏற்படுத்துவதெனில் மக்களது எதிர்பார்ப்பைப் போன்றே மக்களது பிரச்சினைகளுக்கும் உடனடித் தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். இந்தக் கருமங்களை வெற்றிகரமாக ஆக்கிக்கொள்வதற்கென 'இ' ஸ்ரீ லங்கா திட்டத்துடன் இணைந்து மாகாணத்துக்குள் தகவல் தொழினுட்பத் தொடர்பாடல் செயன்முறை செயற்பட்டு வருகின்றது. மாகாணத்தின் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் பற்றி உடனடியாகத் தெரிந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் எல்லா அபிவிருத்தி முன்மொழிவுகளையும் ஒரே வலையமைப்புக்குள் உட்படுத்தி, நவீன கணினி நிகழ்ச்சித்திட்டமொன்று தாபிக்கப்பட்டுள்ளது. அதே போன்று மாகாண சபைக்குள் அபிவிருத்தி செய்யப்பட்ட இலத்திரனியல் கணக்கீட்டு முறை, நிதி முகாமைத்துவத்தில் உயர்ந்த முன்னேற்றத்தைப் பெற வழிவகுத்துள்ளது. அத்துடன்,மாகாணசபை அலுவலர்கள் அனைவரதும் தகவலகளைக் கொண்ட தகவற் தொகுதியொன்று இப்போது தாயரிக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் அரச ஊழியர்களது தகவுத்திறனை உயர்த்தவும், நிருவாகக் கட்டமைப்பை வலுப்படுத்தவும், அரச அலுவலர்களுக்கு வசதிகளை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்கும்போது தேசியக் கொள்கைக்கு அமைய எதிர்காலத்தில் வீட்டிலிருந்தே அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை அபிவிருத்தி செய்வதை நாம் மேலும் மேற்கொள்ள வேண்டும். இந்தச் செயற்பாட்டில் உரிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கென மாகாணத்துக்குள் அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் தேவைப்படும் கணினிகள் வழங்கப் பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

கடந்த காலத்தில் எமது விழாவொன்றை அல்லது விசேட வைபவமொன்றை நடத்த வேண்டி ஏற்பஎன், வேறொரு நிறுவனத்துககு உரிய கேட்போர் கூடத்தை நாடவேண்டிய நிலை இருந்தது. எனினும், இன்று எமக்கென்று ஒரு மிக உயர்ந்த தரத்தில் அமைந்த கேட்பொர் கூடமொன்று உள்ளது. 2014 ஆம் ஆண்டின் மத்திய மாகாணக் கலைவிழாவை 2014.10.16 ஆம் திகதி நடத்தி இந்தக் கேட்போர் கூடத்தைத் திறந்துவைக்க முடிந்ததை நாம்

பெற்றுக்கொண்ட பாரிய வெற்றியாக நான் காண்கின்றேன். நாடகங்களை மேடையேற்றுதல், மாநாடுகளை நடத்துதல் போன்றவற்றுக்கு இதனை வெளியாருக்கு வழங்கிச் சபைக்கு வருமானத்தை ஈட்டிக் கொள்ளவும் முடியும்.

## இரண்டாம் பகுதி

**கௌரவ தலைவர் அவர்களே,**

மக்களுக்காகக் கடந்த வருடத்தில் நாம் மேற்கொண்ட கருமங்கள் பற்றிய மிகச் சிலவற்றை நான் இங்கு குறிப்பிட்டேன். இந்தச் சேவைகளை வழங்கி, மக்கள் நலனை அதிகரிக்க விரும்புவதுடன், இப்போது நான் 2015 ஆம் வருடத்துக்கான எமது மாகாண சபையின் வரவுசெலவுத் திட்ட உத்தேசங்களை முன்வைக்க விரும்புகின்றேன்.

**பெறுகைகள்**

| | | |
|---|---|---|
| **மீள்வரு செலவினங்கள்** | **ரூ. மில்லியன்** | |
| கூட்டு வழங்கல்கள் | 18,000.00 | |
| அரசு வழங்கும் வருவாய்கள் | 3,555.00 | |
| மாகாண வருமான இலக்கு (முத்திரைத் தீர்வைகள், நீதிமன்றத் தண்டங்கள் தவிர) | 1,100.00 | |
| **உள்ளுராட்சி அமையங்களுக்கு மாற்றப்படவேண்டிய வருமானங்கள்** | | |
| முத்திரைத் தீர்வைகள் | 890.00 | |
| நீதிமன்றத் தண்டங்கள் | 100.00 | |
| | | 23,645.00 |
| **மூலதனச் செலவினங்கள்** | | |
| உபமானியப் பங்களிப்பு | 500.00 | |
| மாகாண நிலையான அபிவிருத்தி வழங்கல்கள் | 1,390.00 | |
| ஏனைய செயற்றிட்டங்கள் | 2,489.35 | |
| | | 4,379.35 |
| **மொத்தப் பெறுகைகள்** | | **28,024.35** |

மொத்தப் பெறுகைகளான ரூ. 28,024.35 மில்லியன் தொகையில் ரூ. 23,645.00 மில்லியன் தொகையை மாகாண சபையின் மக்கள் பிரதிநிதிகளதும், அரச அலுவலர்களதும் சம்பளத்துக்காகவும் ஏனைய

மீள்வரு செலவினங்களுக்காகவும் ஒதுக்குவதுடன், எஞ்சிய ரூ. 4379.35 மில்லியன் தொகையை நாம் ஆற்ற வேண்டிய பொருளாதார, சமூக, கலாசார மற்றும் சனசமூக அபிவிருத்தி நடவடிக்கைகளின் மூலதனச் செலவினங்களாகவும் ஒதுக்கித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**கௌரவ தலைவர் அவர்களே,**

2014 ஆம் வருடத்துக்கென என்னால் 2013 நவம்பர் 25 ஆம் திகதி முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் போது நீங்கள் அனைவரும் இந்த கௌரவ சபையில் வாத விவாதங்கள் செய்து பெறுமதி மிக்க ஆலோசனைகள் பலவற்றை முன்வைத்தீர்கள். அது மட்டுமன்றிப் பின்னர் சபை அமர்வுகளின் போதும் பல்வேறு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. தேசியக் கொள்கைகளைச் செயற்படுத்தும்போது நாம் ஆற்றவேண்டிய கருமங்கள், விசேடமாக எமது மாகாண மக்களது பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றுக்கு முன்னுரிமை வழங்கி இந்த வரவு செலவுத் திட்டத்தில் அவற்றுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மக்களிடமிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்காக இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்ய இயலாது என்பதனை நீங்கள் அறியாமல் இல்லை. திறைசேரியிலிருந்து எமக்குக் கிடைக்கும் வழங்கல்கள் மற்றும் மாகாண வருமானங்கள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு, உச்ச அளவில் ஒதுக்கீடுகள் செய்ய முயற்சிக்கப்பட்டுள்ளது என்பதனை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். எவ்வாறாயினும், கடந்த வருடத்தில் அந்தந்த தலைப்புக்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிதித் தொகையை விடவும கூடிய தொகையை இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கித்தர முயற்சித்துள்ளேன் என்பதனை மகிழ்சிசயுடன் குறிப்பிடுகின்றேன். அந்தத் தொகையிலிருந்து அந்தந்த தலைப்புக்கு உரிய ஒதுக்கீடுகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

**பிரதம செயலர் அலுவலகம்**

**கௌரவ தலைவர் அவர்களே,**

மாகாண சபையின் கௌரவ உறுப்பினர்களிடம் பொதுமக்கள் வேண்டிக் கொள்ளும் அபிவிருத்தி முன்மொழிவுகளுக்கென கௌரவ உறுப்பினர் ஒருவருக்கு ரூ. 25 இலட்சம் வீதம் ஒதுக்கித்தர முன்மொழிவதுடன், இதற்கென ரூ. 145 மில்லியனை ஒதுக்கவும், எஞ்சியதாகும் செயற்றிட்டங்களுக்கென ரூ.6 மில்லியனை ஒதுக்கவும் முன்மொழிகின்றேன். மேலும், விசேட செயற்றிட்டங்களுக்கென ரூ. 50 மில்லியனை ஒதுக்கித்தரவும் முன்மொழிகின்றேன். மாகாண அரச சேவை ஊழியர்களுக்குத் தேவையான பயிற்சியை வழங்கவும், அவர்களது அறிவைப் புதுப்பிப்பதற்கான பயிற்சிகளுக்கெனவும் ரூ. 11.5 மில்லியனை ஒதுக்கித்தரவும் முன்மொழிகின்றேன். மேலும், மாகாண கணக்கீட்டு நடவடிக்கைகளை விருத்தி செய்யத் தேவையான உபகரணங்களது கொள்வனவுக்கென ரூ. 8 மில்லியனை ஒதுக்கித்தருவது பொருத்தமென முன்மொழிகின்றேன். அரச சேவையைச் சிறப்புடனும் தகவுத்திறனுடனும் மேற்கொள்வதற்கென அரச அலுவலர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல் வேண்டும். போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கென இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்கான குத்தகைத் தொகையைச் செலுத்தவும், எதிர்வரும் வருடத்தில் கொள்வனவு செய்யப்படவுள்ள வாகனங்களது குத்தகைத் தெகையைச் செலுத்தவுமென ரூ. 189 மில்லியன் தேவைப்படும். அந்தத் தொகையை ஒதுக்கித்தரவும் முன்மொழிகின்றேன். மேலும், அரச அலுவலர்களது உத்தியோகக் குடிமனைகளது திருத்தத்துக்கெனவும், புதிய குடிமனைகளை நிருமாணிக்கவும் என ரூ. 30 மில்லியனை ஒதுக்கித் தர முன்மொழிகின்றேன். பல்வேறு அபிவிருத்தித திட்டங்களை நாம் மேற்கொண்டாலும், சில பிரதேசங்களின் தனிமைப்பட்ட கிராமங்களில் செய்யப்படவேண்டிய விசேட அபிவிருத்தி வேலைகளுக்கென ரூ. 62 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன். மாகாண இறைவரித் திணைக்களத்துக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கென 0.3 மில்லியனையும், பிரதம செயலர் அலுவலகத்தில் முன்வைக்கப்படும் அவசர அபிவிருத்தி வேலைகளுக்கென ரூ. 1.5

மில்லியனை ஒதுக்கவும், நிலையான சொத்துக்களது புனரமைப்புக்கெனவும், விருத்திக்கெனவும் ரூ. 4.0 மில்லியனை ஒதுக்கவும் முன்மொழிகின்றேன்.

**கௌரவ தலைவர் அவர்களே,**

கௌரவ ஆளுநர் அலுவலகத்துக்கும் ஒவ்வொரு அமைச்சையும் விட ஒரு வாகனம் வீதம் கொள்வனவு செய்வதற்கென ரூ. 52 மில்லியன் ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

**கல்வி அபிவிருத்தி**

மாகாணக் கல்வி அபிவிருத்தி கருதி ரூ. 548.92 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன். இந்தத் தொகையை முதலீடு செய்வதன் மூலம் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியில் நுழைவதற்கென ஒவ்வொரு பிள்ளைக்கும் சமமான சந்தர்ப்பத்தை வழங்கும் நோக்குடன் விசேட வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துதல், அவற்றை வலுப்படுத்துதல், முறைசாராத கல்வித் திட்டத்தை வலுவூட்டுதல், பண்புசார் கல்விக்காக அதிபர்களையும் ஆசிரியர்களையும் பயிற்றுவித்தல், கணிப்பீட்டுச் செயன்முறைகளை மேலும் முறைப்படுத்துதல், அதன் மூலம் கற்பித்தல் செயன்முறைகளில் பண்புசார் தன்மையை உயர்த்துதல், இடைநிலைக் கல்வியிலிருந்து இடைவிலகும் பிள்ளைகளைத் தொழில்சார் கல்வியில் ஈடுபடுத்துவதற்கான விசேட வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துதல், பாடசாலைக் கல்வியைப் பரீட்சை மையக் கல்வியில் வரையறை செய்யாது தொழில்சார் மற்றும் சமூகத் தேர்ச்சிகளை விருத்தி செய்யும் கல்விமுறையாக மாற்றியமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பிள்ளைகள் கற்பதற்குப் போதிய அளவில் மேசைகள் கதிரைகள் இருத்தல் வேண்டும். பாடசாலைகளில் சிதைந்து போயுள்ள பெருமளவிலான மேசைகள், கதிரைகள் சேர்ந்துள்ளன. இவற்றைத் திருத்தம் செய்து பயனடையும் வேலைத்திட்டம் ஏறத்தாழ 6 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பம் செய்யப்பட்டது. இத்திட்டம் மிகவும் வெற்றிகரமான பெறுபேறுகளை வழங்கியதனால் அதனை முன்னெடுத்துச் செல்ல முன்மொழிகின்றேன்.

மிகவும் கஷ்ட பிரதேசங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகளை நாம் செய்து கொடுக்க வேண்டும். அவ்வாறின்றேல், அவர்களிடமிருந்து உச்ச அளவில் சேவையைப் பெற முடியாது. எனவே, பாடசாலை உத்தியோகக் குடிமனைகளை அமைத்தல் அல்லது திருத்தியமைத்தலுக்கென ரூ. 6 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன். அத்துடன், தனிமைப்படுத்தப்பட்டுள்ள பாடசாலைக் காணிகளில் குடிமனைகளை அமைப்பது அவ்வளவு பயன்தரும் வேலையாக இல்லாததனால், நகராண்மையில் அல்லது ஏனைய வசதிகளைக் கொண்டுள்ள இடங்களில் பொதுவான ஆசிரியர் குடிமனைகளை அமைக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலைக் கட்டடங்களை அமைப்பதில் மிகவும் அத்தியாவசிய நிருமாணங்களை மட்டுமே மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கல்வி பற்றி உரையாடும்போது பாடசாலை செல்லும் பிள்ளகைளது நலன் மட்டுமல்லாது முன் பிள்ளைப்பருவம் பற்றியும் கவனம் செலுத்துதல் வேண்டும். பிள்ளைகள் பாடசாலை செல்ல முன்னர் அவர்களுக்கு அது பற்றிய முன் பயிற்சியொன்றை வழங்குவது அவசியமெனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கென ரூ. 05 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

**உள்ளூராட்சி அமையங்களது சேவைகள்**

முன்னொரு சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிட்டவாறு உள்ளூராட்சி அமையங்கள் ‘‘கிராமிய அரசு’’ என அழைக்கப்படுகின்றன. பொதுமக்களுக்குத் தேவையான அதிக அளவான சேவைகள் உள்ளூராட்சி அமையங்கள் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. எனினும், எல்லா சேவைகளையும் நிறைவேற்றுமளவுக்கு அவற்றுக்கு வருமானம் கிடைப்பதில்லை. அவர்களால் ஆற்றப்படவேண்டிய, எனினும் பாரிய செலவுகளை எதிர்கொள்ளக்கூடிய கருமங்களில் நிதியை ஒதுக்கீடு செய்ய முன்மொழிகின்றேன்.

**திண்மக் கழிவுப்பொருள் முகாமை**

நகர்மயமாக்கம் துரிதமாகுதல், வீடுகள் தொடர்பில் உள்ள கழிவுகளை அகற்றப் போதியளவு இடவசதிகள் இல்லாமை மற்றும் கழிக்கப்படும் பொருட்களது அளவு அதிகரிக்கின்றமை போன்ற காரணிகளால் சேரும் கழிவுகளின் அளவு முகாமை செய்யப்படவேண்டி உள்ளது. கழிவுகளைக் கொண்டு சேர்க்கப் பொருத்தமான இடங்கள் இல்லாமை பெரும் பிரச்சினையாக உள்ளது. எமது உள்ளூராட்சி அமையங்களது கௌரவ தலைவர்கள் கழிவகற்றுவதற்குப் பொருத்தமான இடங்களை ஏற்பாடு செய்யுமாறு நிதமும் கேட்டுக்கொள்கின்றனர். எனினும், சுற்றாடல் காரணிகள் மற்றும் கழிவகற்றும் இடங்களுக்கிடையே உள்ள தூரம், அதற்கான செலவுகள் போன்ற காரணிகளைக் கவனத்தில் கொள்ளும்போது, பாரிய செலவினை எதிர்கொள்ள நேரிடுகின்றது. எனவே, வீடுகளிலேயே கழிவுப்பொருட்களை முகாமை செய்துகொள்ள மக்களை ஊக்குவித்தல் வேண்டும். உள்ளூராட்சி அமையங்கள் மூலம் வழங்கப்படும் குப்பைக் கொள்கலன்களை வீடுகளிடையே பகிர்ந்தளிப்பதைப் பிரபலியப்படுத்துதல் வேண்டும். மேலும், கூட்டெரு தயாரிப்பை விருத்தி செய்தல் வேண்டும். இவ்வாறான கழிவுப்பொருள் முகாமை நடவடிக்கைகளுக்கென ரூ. 24 மில்லியனை ஒதுக்கித் தரவும், வார சந்தைகளை அமைக்கவும் அல்லது அவற்றைத் திருத்தியமைக்கவும் என ரூ. 14 மில்லியனை ஒதுக்கித்தரவும் முன்மொழிகின்றேன். அத்துடன், மக்களுக்குத் தூய குடிநீரை வழங்கவதற்கென அமைக்கப்பட்ட பிரசைகள் குடிநீர் வழங்கல் திட்டங்களின் குறைபாடுகளை நிறைவு செய்வதற்கும் அல்லது அவ்வாறான செயற்றிட்டங்களை ஆரம்பித்து மக்களுக்குத் தூய குடிநீரை வழங்கவென ரூ. 14 மில்லியனை ஒதுக்கித் தரவும் முன்மொழிகின்றேன்.

உயிர்வாழும் ஆட்களது நலன்களுக்கெனச் செயற்படுவதைப் போன்றே இறந்தவர்களது இறுதிக் கிரியைகளைக் கௌரவமான முறையில் மேற்கொள்ளத் தேவையான வசதிகளை வழங்குவது எமது கடமையாகுமென நான் கருதுகின்றென். இதற்காகத் தற்பொது தகனசாலைகளின் குறைபாடுகளை நீக்குவதற்கென ரூ. 15 மில்லியனை ஒதுக்குவது பொருத்தமென முன்மொழிகின்றேன்.

உள்ளூராட்சி அமையங்களது கொள்ளளவை விருத்தி செய்வதற்கென ரூ. 1 மில்லியனை ஒதுக்கித் தர முன்மொழிகின்றேன். முன்னோடிச் செயற்றிட்டமாக செயற்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டத்துக்கென மாகாண உள்ளூராட்சி அமைச்சினது ஒத்துழைப்பு பெறப்படவுள்ளது. இதன் மூலம் புவியியல் தகவல் தொழினுட்பத்தைப் (GIS) பயன்படுத்திச் சொத்துக்களைக் கணிப்பீடு செய்தல், வரித்தொகை சேகரிப்பின்போது பிரதம அலுவலகத்துக்குச் செல்லாது இணையதளத்தின் ஊடாகக் கொடுப்பனவு செய்தல், பொதுமக்களது முறைப்பாடுகளைத் தாமதமின்றிப் பரிசீலித்துத் தீர்வு செய்தல் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த முன்னோடித் திட்டம் தெரிந்தெடுக்கப்பட்ட ஒருசில உள்ளூராட்சி அமையங்களில் மட்டுமே செயற்படுத்தப்படவுள்ளது.

உள்ளூராட்சி அமையங்களிடமுள்ள பெரும்பாலான பாதைகள் பல்வேறு மூலகங்களின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. எனினும், உயர் மட்டத்தில் விருத்தி செய்யப்பட்டுள்ள பாதைகளது பராமரிப்புக் கருமங்களை நிறைவேற்ற வேண்டியுள்ளது. இதற்கென ரூ.139 மில்லியனை ஒதுக்கித்தர இந்த கௌரவ சபையில் முன்மொழிகின்றேன். இதற்கமைய, உள்ளூராட்சி அமையங்கள் மூலம் மேற்கொள்ளப்படவேண்டிய கருமங்களுக்கென ஒதுக்கப்படம் முழுத் தொகையும் ரூ. 207 மில்லியனாக இருக்கும்.

## சுற்றுலா விவகாரங்கள்

போர் முடிவுக்கு வந்து நாட்டில் சமாதானம் ஏற்பட்டதுடன் இலங்கைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டு தோறும் அதிகரித்து வந்துள்ளது. அதற்கமைய 2016 ஆம் வருடத்துக்குள் 25 இலட்சத்துக்கும் அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தருவர் என நம்பப்படுகின்றது. அவற்றுள் அதிகமானோர் மத்திய மாகாணத்துக்கும் வருகை தருவர். சுற்றுலா மூலம் வருமானம் ஈட்டப்படுவது மட்டுமல்லாது, நேரடியான மற்றும் மறைமுகமான வழிகளில் பெருமளவு தொழில் வாய்ப்புகள் உண்டாகின்றன. எனவே, இயற்கை எழில் மிக்க இடங்கள், கலாசார மரபுரிமைகளின் முக்கியம் வாய்ந்த இடங்களை மையமாகக் கொண்டு உண்ணாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்

பயணிகளை மாகாணத்துக்குள் வரச் செய்வதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. அதே போன்று நாட்டின் அடையாளத்தை வெளிக்காட்டும், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பொருட்கள் மற்றும் நினைவுப் பொருட்கள் என்பவற்றின் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறான உற்பத்திகளைச் சந்தைப் படுத்துவதற்காகத் தனியார் துறையினரது ஒத்துழைப்புடன் நடைபெறும் சந்தைகளை நவீனமயப்படுத்துவதும் முக்கியமாகும். மேலும், எமது தேசிய மருத்துவ முறை பற்றி வெளிநாட்டவரிடையே நம்பிக்கையொன்று நிலவுகின்றது. பரிகாரத்துக்கென வருகைதரும் வெளிநாட்டவரது வசதி கருதி, ஆயுர்வேத திணைக்களத்துடன் இணைந்து இதனை விருத்தி செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான கருமங்களை மேற்கொள்வதற்கென முன்னைய வருடத்தை விடவும் 23% அதிகமான தொகையை, அதாவது ரூ. 32 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## காணி அபிவிருத்தி விவகாரங்கள்

மாகாணத்துக்குள் அமைந்துள்ள காணிகளது நம்பிக்கைப் பொறுப்பை ஏற்று, மக்களது முன்னேற்றம் கருதிப் பல்வேறு கையாளல்களின்போது பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் சமநிலையைப் பேணி, சிறந்த முகாமையுடன் செயற்படவும், குடியேற்ற நிலங்களில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கென ரூ. 5 மில்லியனையும், அரச கட்டடங்கள் அமைந்துள்ள காணிகளைக் கையேற்பதற்கெனவும், தேவையேற்படின் அதற்கான கொடுப்பனவுகளைச் செய்யவும் என ரூ.3 மில்லியனையும், மகாவலித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட, மாகாண சபை கையேற்றுள்ள சொத்துக்களது பராமரிப்புக்கென ரூ.7 மில்லியனையும் ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## கலாசார விவகாரங்கள்

மத்திய மாகாணத்துக்குள் இணங்கண்டுள்ள, இனங் காணப்படாத கலாசார மரபுரிமைகளைப் பாதுகாத்து, அந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோரைப் பாதுகாக்கவும், கலைஞர்களது நலனோம்பல், சமய, கலாசார, விழுமியம்சார், சமய நற்பண்புகளை மேலோங்கச் செய்வதற்கெனவும் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், அதற்கென ரூ.4 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

கூட்டுறவு அமைப்பு ஒரு காலத்தில் மிகவும் மந்த நிலையில் இருந்தது. அதனை நவீனமயப்படுத்தியதன் காரணமாகத் தற்போது ஓரளவு முன்னேற்றம் காணப்படுகின்றது. அதனை மேலும் கட்டியெழுப்பவதற்கெனத் தேவைப்படும் வசதிகளை வழங்கி, வருமான மேம்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கவென ரூ. 5 மில்லியனையும், கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவுக்கென ரூ.0.4 மில்லியனையும் ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

முதலமைச்சுக்கு உரிய விடயங்களுள் அவசரமாக நிறைவேற்ற வேண்டிய அபிவிருத்திக் கருமங்களுக்கென ரூ.1.5 மில்லியனையும், அமைச்சுக்கான நிலையான சொத்துக்களது புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமென ரூ.11 மில்லியனையும் ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## சுகாதார சேவைகள்

சுகாதாரத் துறையில் முதலீடு செய்வதன் மூலம் நாம் மக்களது ஆரோக்கிய வாழ்வையும். நோயற்ற நிலையையும் பேணுவதன் மூலம் சிரமப் பயன்தரு நிலையை உயர் மட்டத்தில் வைத்துக்கொள்வதையே எதிர்பார்க்கின்றோம். இங்கே நோய்களைத் தடுத்துக்கொள்ளல் மற்றும் நோய்ப் பரிகாரம் என்ற இரண்டு துறைகளில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். அத்துடன், நோய்த் தவிர்ப்பு முறைகளிலும் விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். நிகழ்காலத்தில் தொற்றாத நோய்கள் மற்றும் இறப்புக்கள் மிக அதிகமாக உள்ளதனால், தொற்றாத நோய்களைத் தடுத்துக்கொள்வதில் விசேட திட்டங்களை அறிமுகம் செய்வது அவசியமாகின்றது. மேலும்,

தொற்றுநோய்கள் பரவுவதை இயன்ற அளவில் குறைத்துக் கொள்வதற்கென மக்களை அறிவூட்டும் திட்டங்களைப் பரவலாகச் செயற்படுத்துவதும் அவசியமாகின்றது. இதற்கென மேலைத்தேய மற்றும் தேசிய மருத்துவப் பிரிவும் ஒன்றிணைந்து செயற்படுதல் முக்கியமாகும்.

தேசிய வைத்தியப் பிரிவின் ஊடாகப் பாரம்பரிய மருத்துவ முறை மீது மேலதிக கவனம் செலுத்தி, அதனைப் பாதுகாத்துப் பொதுமக்களுக்கு முறையான அதிக சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், பொருளாதாரக் கஷ்டங்கள் காரணமாகத் தமது பாரம்பரிய மருத்துவ முறையை நன்கு செயற்படுத்த முடியாதிருக்கும் தேசிய மருத்துவர்களை இனங்கண்டு, அவர்களது மருத்துவ முறையை விருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஐரோப்பிய மருத்துவ சேவை நடவடிக்கைகளுக்கென ரூ. 546 மில்லியனையும், தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வரும் தெல்தெனிய ஆதார மருத்துவ மனையின் எஞ்சிய வேலைகளைச் செய்யவுமென ரூ.420 மில்லியனையும், கண்டி ஸியா மருத்துவ மனையின் எஞ்சிய வேலைகளுக்கென ரூ.2.21 மில்லியனையும் ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன். மேலும், தேசிய மருத்துவ நடவடிக்கைகளுக்கென ரூ. 24 மில்லியனையும் ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள்

பெற்றோரது பொருளாதாரக் கஷ்டங்கள் காரணமாகவோ, அவர்களது ஒவ்வாத செயற்பாடுகள் காரணமாகவோ, சமூகத்தின் துர்நடத்தைப் பேர்வழிகள் காரணமாகவோ அல்லது ஏனைய கருமங்கள் காரணமாகவோ நிர்க்கதிக்கு உள்ளாகும் பிள்ளைகளை நாம் பாதுகாக்க வேண்டியுள்ளது. இவ்வாறான பிள்ளைகளுக்குப் பாதுகாப்பை வழங்கி, அவர்களைச் சமூகமயமாக்கி நற்பிரசைகளாக ஆக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், அவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்படாதவாறு சமூகத்தை அறிவூட்டம் செய்வதற்கெனவும் ரூ. 14 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன். மேலும், உலகக் குடித்தொகை அறிக்கைகளுக்கமைய, சமூகத்தில் முதியோரது குடித்தொகை படிப்படியாக அதிகரித்து வருகின்றது.

பிள்ளைகளது அரவணைப்பின்றி முதியோர் இல்லங்களில் வாழும் வயது முதிர்ந்தோரைப் பராமரித்து, அவர்களது தேவைகளை நிறைவு செய்தல் மற்றும் இயற்கைக் காரணிகளாலோ வனவிலங்குகளாலோ நிர்க்கதிக்கு உள்ளாகும் மக்களுக்கு உதவுவது மற்றும், சமூக மட்டத்தில் நன்மையற்ற ஆட்களுக்கென சுயதொழில் பயிற்சிகளை வழங்கவும் என ரூ. 12 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன். மேலும், சகாதார, தேசிய மருத்துவ, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சமூக சேவைகள் அமைச்சின் அவசர அபிவிருத்தி வேலைகளுக்கென ரூ. 1.5 மில்லியனையும், நிலையான சொத்துக்களது புனரமைப்புக்கெனவும், அபிவிருத்திக்கெனவும் ரூ.6 மில்லியனையும் ஒதுக்குவது பொருத்தமென முன்மொழிகின்றேன்.

## விவசாய நடவடிக்கைகள்

தங்கி வாழும் தரத்தில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் விவசாயிகளைப் போன்றே சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் மீதும் கவனம் செலுத்திப் பயன்தரும் வகையில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்களை உற்சாகப் படுத்துதல் வேண்டும். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயிகளிடமிருந்து பயன்தரும் உற்பத்திகளை எதிர்பார்க்க முடிவதுடன், அதன் மூலம் கிராமிய மட்டத்தில் தொழில் வாய்ப்புக்களும் ஏற்படும். விவசாயத் துறையின் முதலீடுகள் மூலம் நெற்செய்கை, ஏனைய களப் பயிர்கள், பழவகைகள் மற்றும் காய்கறிகள் என்பவற்றின் உற்பத்தியை அதிகிரிப்பதற்காகத் தேவைப்படும் நடுகைப் பொருட்கள் உள்ளிட்ட இடுகைகளை விவசாயிகளுக்கு வழங்குதல், விவசாயத் தொழினுட்ப அறிவை வழங்குதல், அவர்களது விளைபொருட்களது சேர்க்கப்பட்ட பெறுமதிகளை உயர்த்துதல் மற்றும் பயிர்களது பல்வகைத்தன்மை மற்றும் புதிய விவசாய நுட்ப முறைகள் போன்றவை பற்றி விவசாயிகள் அறிவூட்டம் செய்யப்படுவர். அது மட்டுமன்றி, இரசாயன வளமாக்கிகளது பயன்பாட்டைக் குறைத்துக் காபனேற்று பசளைகளது பயன்பாட்டை உயர்த்துதல், தேசிய விதைகள் உற்பத்தியை ஊக்குவித்தல் போன்றவை தொடர்பிலும் கவனம் ஈர்க்கப்படும்.

மரபுரீதியான நெல்வகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஆக்கச் செலவைக் குறைக்க முடிவதுடன், உயர்ந்த வருமானத்தையும் பெற்றுக்கொள்ள முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, நெற்செய்கையாளர்களது கவனத்தை இந்த விடயத்தில் ஈர்க்கச் செய்வது அவசியமாகும்.

பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்குச் செய்கை மத்திய மாகாணத்தில் பாரிய அளவில் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த உற்பத்திகளது விலைத் தளம்பல் நிலையைக் குறைத்துக் கொள்வதற்கென அரசம ற்றும் தனியார் துறையினருடன் ஒன்றிணைந்து உற்பத்திகளை நியாயமான விலையொன்றில் கொள்வனவு செய்வதற்கான வழிமுறையொன்றை அறிமுகம் செய்வது காலத்தின் தேவையாக உள்ளது. இதனை மேற்கொள்ளவென ரூ. 51 மில்லியனை ஒதுக்கித்தருவது பொருத்தமென முன்மொழிகின்றேன்.

காய்கறி மற்றும் பழச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு நியாயமான விலையொன்றை வழங்குவது இயலாத ஒன்றாக உள்ளதுடன், குறித்த உற்பத்திகள் கொண்டுசெல்லப்படும் போது ஏற்படும் நட்டங்களால் பெருமளவில் வீணாகின்றன. விசேடமாக விவசாய நிலங்களை அண்மித்த பாதைத் தொகுதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலமும், பொருத்தமான பொதியிடுதல் முறை மூலமும் இந்நிலைமையைத் தவிர்க்க முடியும் என நான் நம்புகின்றேன். எனவே, விவசாயப் பாதைகளின் அபிவிருத்திக்கென ரூ. 7 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிவதுடன், ஏராளமான பாதைகளைத் தெரிந்தெடுப்பதற்குப் பதிலாகச் சில பாதைகளை மட்டும் தெரிந்தெடுத்து அபிவிருத்தி செய்வது பொருத்தமென நினைக்கின்றேன்.

## விலங்குவள அபிவிருத்தி

நோயற்ற பயன்தரும் விலங்கினத்தை மாகாணத்துக்குள் பராமரிப்பது, விரிவாக்கல் சேவையை விரிவுபடுத்துவது, பண்ணையாளர்களை அறிவூட்டம் செய்வது போன்ற திட்டங்களைச் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. நடுத்தர அளவிலான பாலுற்பத்தியாளர்களைத் தோற்றுவிப்பதன் மூலம் அவர்களைத் தொழில் முயற்சியாளராக்கி, நிலையான வருமான மட்டத்தைப்

பேணிவர இயலுமாகும். பாலுற்பத்தி மட்டுமல்லாது முட்டை, இறைச்சி போன்ற உற்பத்திகளிலும் எமது கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. விலங்குவள அபிவிருத்திக்கென ரூ. 32 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## சிறிய நீர்ப்பபாசன அபிவிருத்தி

மத்திய மாகாணத்துக்குள் மாகாண சபை மூலம் பராமரிக்கப்பட வேண்டிய 3876 சிறிய நீர்ப்பாசனங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு வருடத்திலும் இதன் ஒரு பகுதியை அபிவிருத்தி செய்தாலும், அவற்றில் முடிவு காண முடியாது உள்ளமைக்கான காரணம் விவசாயிகளோ அல்லது விவசாய மன்றங்களோ இவற்றைப் பராமரிப்பு செய்யாமையும், அதிக மழை காரணமாக இவை சேதத்துக்கு உட்படுவதுமாகும். முற்காலத்தில் இருந்தவாறு நீர்ப்பாசனங்களையோ, குளங்களையோ பராமரிக்கும் முறை இன்று காணப்படுமெனின், இவற்றைப் பராமரிப்புச் செய்ய அரசாங்கம் செலவிடவேண்டிய தேவை ஏற்படாது. சிறிய நீர்ப்பாசனங்களை அரசு பராமரிப்பதன் மூலம் பயிர்ச்செய்கை நிலங்களுக்குத் தேவையான நீர் வழங்கல் உறுதி செய்யப்படுகின்றது. பயிர்ச்செய்கை நிலம் வரை நீரைக் கொண்டு செல்லத் தேவையான எல்லாக் கருமங்களிலும் கவனம் செலுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதற்கென நீர்ப்பாசன முறைகளைப் பராமரித்தல், புனரமைத்தல், அபிவிருத்தி செய்தல், புதிய நீர்ப்பாசனங்களை அமைத்தல், முறையான நீர் முகாமைத்துவத்தில் கவனம் செலுத்துதல் என்பவற்றிலும் கவனம் செலுத்தப்படும். இதற்கென விவசாய மன்றங்களது ஒத்துழைப்பை உச்ச அளவில் பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கப் படுகின்றது. நெற்செய்கையை விடவும் நீரைச் சரியான வழியில் பயன்படுத்துவது மற்றும் முகாமை செய்வது பற்றி விவசாயிகளை அறிவூட்டம் செய்வதன் மூலம் ஊடுபயிர்ச் செய்கைக்கான நீரையும் பெற்றுக்கொள்ள முடிகின்றது. இந்தக் கருமங்களை நிறைவேற்றுவதற்கென ரூ. 24 மில்லியனை ஒதுக்குவது பொருத்தமென முன்மொழிகின்றேன்.

## நன்னீர் மீன்பிடி

கிராமிய மக்களிடையே நன்னீர் மீன்பிடியைப் பிரபலியம் செய்வதன் மூலம் மக்களின் போசணைக் குறைபாட்டு நிலையைக் குறைக்க முடிவதுடன், நன்னீர்த் தேக்கங்களை அண்டி வாழ்வோருக்குக் குறைந்த விலையில் நனீனர் மீன்களைப் பெற்றுக்கொள்ள வழி செய்தல், மீன் உற்பத்திகளை அதிகரித்தல், சந்தைப்படுத்தல் வசதிகளை விருத்தி செய்தல், சந்தைகளை ஒன்றிணைப்பு செய்தல் மற்றும் வண்ண மீன் வளர்ப்பை விருத்தி செய்தல் போன்ற நோக்கங்களை முன்னெடுத்துக் கடந்த வருடங்களில் 5.4 மில்லியன் மீன் குஞ்சுகளை நீர்த்தேக்கங்களில் விடுவித்தல், 34 படகுகள் மற்றும் 514 வலைகள் பகிர்ந்தளித்தல், 34 விற்பனைக் கூடங்களை அமைத்தல் போன்றன மேற்கொள்ளப் பட்டுள்ளன. வண்ண மீன்களை விற்பனை செய்வதன் மூலம் வர்த்தகர்கள் நல்ல வருமானத்தை ஈட்டுகின்றனர். இந்தத் திட்டங்களை எதிர்காலத்திலும் மேற்கொள்வதகென ரூ. 7 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## சுற்றாடல் விவகாரம்

சுற்றாடல் என்பது எம்மைச் சூழவுள்ள அனைத்தையும் குறிக்கும். மரம் செடி கொடிகள், பிராணிகள், விலங்குகள், ஆறுகள், குளங்கள், நீரோடைகள் போன்ற இங்கு குறிப்பிட்ட, குறிப்பிடாத அனைத்தும் இதனுள் அடங்கும். இவற்றைப் பாதுகாப்பதன் மூலம் எமக்கு மட்டுமல்லாது எமது எதிர்காலப் பரம்பரைக்கும், புவியில் வசிக்கும் அனைவருக்கும் நல்லதொரு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்ள உதவும். பல்வேறு நபர்கள் பல வழிகளிலும் சுற்றாடலை அழிவுக்கு உட்படுத்துகின்றனர். அறியாமை காரணமாக இதனைச் செய்கின்றனர் எனக் கொள்ள முடியாது. தமது சுயநலம் கருதியே இதனைச் செய்கின்றனர் என நினைக்கலாம். சுற்றாடலை அழிப்பது தமது வாழ்வையே அழித்துகொள்வது போனறதாக உள்ளது. இவ்வாறான அழிவை மீளக் கட்டியெழுப்ப எக்காலத்திலும் முடியாது. எனினும், சுற்றாடலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பது எமது கடமையாக உள்ளது. பொருத்தமான இடங்களில் பொருத்தமான மரங்களைப் பயிரிடுதல், காடுகள் எரிக்கப்படுவதைத் தவிர்த்தல், விலங்குகள்

உயிரினங்களுக்குத் தேவையான சுற்றாடலைப் பாதுகாத்துக் கொடுத்தல், அவற்றை அழிவுக்கு உட்படுத்தாதிருத்தல் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளை நாம் மேற்கொள்ள முடியும். விசேடமாகப் பாடசாலைப் பிள்ளைகளைச் சுற்றாடலைப் பாதுகாப்பதில் ஈடுபடுத்துதல் மிகவும் முக்கியமாகும். இவ்வாறான வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கென ரூ. 5.5 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிவதுடன், அத்தொகை எவ்வகையிலும் போதாதுள்ளது என்பதையும் குறிப்பிடுகின்றேன். எனவே, உங்களது பன்முகப்படுத்திய ஒதுக்கீடுகளிள் மூலமேனும் நிதியிட்டுக் கிராமங்களின் சங்கங்கள், மன்றங்களைத் தொடர்பு கொண்டு தமது பிரதேசத்தில் சுற்றாடலைப் பாதுகாக்கும் திட்டங்களை ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## இந்து கலாசார விவகாரங்கள்

எமது சகோதர தமிழ் மக்களது இந்து சமய விவகாரங்கள் மற்றும் அவர்களுக்கே உரித்தான கலாசாரப் பாரம்பரியங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வது எமதுமாகாண சபையின் கடமையாகும். இந்து அறநெறிப் பாடசாலைகளது அபிவிருத்தி, தமிழ் மக்களது கலை, இலக்கியம், இசை, நடனம் என்பவற்றைப் பாதுகாப்பதற்கும் பிரபலியப் படுத்துவதற்குமென ரூ. 2 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## பெருந்தோட்டப் பாதைகள் அபிவிருத்தி

பெருந்தோட்டப் புறங்களின் பாதைகளில் பெரும்பாலானவை பல்வேறு மூலாதாரங்களின் மூலம் கொங்கிறீட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. இன்னும் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய பாதைகளது அபிவிருத்திக்கென ரூ. 32 மில்லியனை ஒதுக்கித் தருவதுடன், தோட்ட அதிகாரசபை மற்றும் சிறிய தோட்ட உரிமையாளர்களது சங்கங்கள் என்பவற்றின் உதவியுடன் இந்தப் பாதைகளுள் அதிகமானவற்றை அபிவிருத்தி செய்துவிட முடியும்.

விவசாய, நீர்பபாசன, விலங்குவள உற்பத்தி அமைச்சின் கீழ் வரும் விடயங்களது அவசர அபிவிருத்தி வேலைகளுக்கென ரூ. 1.5 மில்லியனையும், மூலதனச் சொத்துக்களது புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமென ரூ. 1 மில்லியனையும் ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## பாதைகள்

எதிர்வரும் ஆண்டில் அபிவிருத்தி செய்வதற்கெனப் பாதைகளைத் தெரிந்தெடுப்பதில், பயன்படுத்தும் மக்களது தொகை, தேசிய பாதைத் தொகுதியுடன் உள்ள தொடர்பு, பொருளாதார நடவடிக்கைகளில் காணப்படும் தலையீடு போன்ற அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்படும். பாதைகளைப் பராமரிப்புச செய்யும்போது அவற்றின் நிலைப்புத்தன்மை உறுதிப்படுத்தப்படும் வண்ணம் பிரதேசத்தின் தரையமைப்பு, காலநிலை என்பனவும் கவனத்தில் கொள்ளப்படும்.

பாதைகளின் அபிவருத்திக்கென மாகாண சபை நிதியத்தின் கீழ் ரூ. 291 மில்லியனையும், ஏற்கனவே தெரிந்தெடுக்கப்பட்டுள்ள பாதைகளை உயர்மட்டத்தில் அபிவிருத்தி செய்வதற்கென ஜய்க்கா உதவித் திட்டத்தின் கீழ் ரூ. 1371.22 மில்லியன் தொகையையும் ஒதுக்க முன்மொழிவதுடன், இதற்கு மேலதிகமாக ஆசிய அபிவிருத்தி வங்கி உதவித் திட்டத்தின்கீழ் 600 கி.மீ. பாதைகளையும் 2015 ஆம் ஆண்டில் காப்பற் இட்டு அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

## மின்சக்தி மற்றும் மாற்று சக்திவளங்கள்

இலங்கையில் ஒவ்வொரு வீட்டுக்கும் மின்சாரத்தை வழங்குவது அரசின் கொள்கையாகும். இதற்கென அரசாங்கம் பாரிய திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. தற்போது மாகாணத்துக்குள் மின்வசதி இல்லாத 20,256 குடும்பங்கள் உள்ளன. தற்போது மாகாணத்தில் வாழும் குடும்பங்களுள் 96.9% ஆனோருக்கு மின்வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாகாணசபை என்ற வகையில் தேசிய மின்சாரக் கட்டமைப்பிலிருந்து எதிர்வரும் 3 ஆண்டுகளுக்குள் மின்வசதி வழங்க இயலாதுபோகும் பிரதேசங்களுக்குப் பயன்தரும் வகையில் மாற்றீடு மின் பிறப்பாக்கிகளை வழங்குவது எமது பொறுப்பாக உள்ளது. மேலும், தேசிய மின்சாரக் கட்டமைப்பிலிருந்து மின நீடிப்பை வழங்கும்போது தனித்த வீடுகளுக்கு மின்கம்பி இழுப்பதை விடுத்துப், பொதுவான நீடிப்புக்கென ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும். இந்தச் செயற்பாடுகளுக்கென ரூ. 15 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிக்னறேன்.

## போக்குவரத்து

மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவது எமது எதிர்பார்ப்பாகும். இங்கு, இலங்கை போக்குவரத்து சபை மூலம் பராமரக்கப்படும் பஸ் நிலையங்கள் தவிர்ந்த ஏனைய நிறையங்களை நிறுவுதல், திருத்தம் செய்தல், பயணிகள் தரிப்பிடங்கள் அமைத்தல் என்பவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய எதிர்பார்க்கின்றேன். இதற்கென ரூ. 24 மில்லியனை வழங்க முன்மொழிகின்றேன்.

## வீடமைப்பு அபிவிருத்தி

வறிய ஆட்களுக்கென வீடுகளை அமைப்பதற்காக உதவிகள் மற்றும் கூரைத்தகடுகளை வழங்கவும், குறை வருமானம் பெறுவோருக்கெனக் குறைந்த வட்டி வீதத்தில் வீடமைப்புக் கடன்களை வழங்குவதற்கெனவும் ரூ. 5 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

மின்சாரம், சக்திவளம் மற்றும் வீடமைப்பு அமைச்சின் விடயத் தலைப்பின் கீழ் வரும் அவசர அபிவிருத்தி வேலைகளுக்கென ரூ. 1.5 மில்லியனையும், அமைச்சின் திணைக்களங்கள், அமையங்களது மூலதனச் சொத்துக்களின் புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமென ரூ.1 மில்லியனையும் ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## சிறு கைத்தொழில்கள் அபிவிருத்தி, வர்த்தக மேம்பாடு மற்றும் தொழிற்பயிற்சி

மாகாணத்துக்குள் அமைந்துள்ள மரபுரீதியான உற்பத்திகளை ஊக்குவித்தல், அவற்றின் பண்பளவான தன்மையை உறுதி செய்தல், சந்தை ஒன்றிணைப்பு மற்றும் புதிய தொழினுட்பங்களின் அறிமுகம் போன்ற செயற்பாடுகளில் கவனம் செலுத்திக் கைத்தொழில்களது வருமானத்தை உறுதிப்படுத்தி அவற்றைப் பாதுகாத்தல், குறித்த பிரிவுகளுக்குத் தேவையான உழைப்பாளிகளைப் பயிற்றுவித்தல் என்பனவும் மேற்கொள்ளப் படவுள்ளன. வேலையற்ற, எனினும் ஏதேனுமொரு தொழில் பற்றிய பயிற்சியைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் இளைஞர் யுவதிகளைப் பயிற்றுவிப்பது அவசியமாகும். தொழிற் பயிற்சியைப் பெற்றுள்ளஇளைஞர் யுவதிகளுக்குத் தேசிய மற்றும் வெளிநாட்டுத் தொழிற் சந்தைகளில் மிக உயர்ந்த கேள்வி நிலவுகின்றது. தொழிற்பயிற்சியை வழங்கும்போது அதன் இறுதியில் வழங்கப்படும் சான்றிதழ்கள் தேசய தொழிற் தகைமைச் (NVQ) சான்றிதழுடன் சமமாக இருத்தல் வேண்டும். பயிற்சியின் இறுதியில் சிறந்த மாணாக்கருள் சிலருக்கு கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு அடிப்படை மூலதனம் தேவைப்படின், அதற்கென வணிகக் கழகங்கள், மத்திய வங்கயின் பிராந்திய அலுவலகங்கள், பிரதேச வங்கிகளுடன் இணைப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். இதற்கென ரூ. 16 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## நெசவுக் கைத்தொழில்

இலங்கையில் சென்ற காலத்தில் நெசவுத்தொழில் நல்ல நிலையில் இருந்ததென்றாலும், இன்று அதன் உற்பத்திகளுக்கு அவ்வளவான கேள்வி காணப்படவில்லை. நாம் முயற்சிதத்தால் அந்த முன்னேற்ற நிலையைக் கொண்டுவரும் இயலுமை உண்டு. மாகாணத்துக்குள் காணப்படும் கைத்தறி நிலையங்களுள் பெரும்பாலானவை பழையவையாக உள்ளன. அவற்றிலுள்ள இயந்திரங்கள் காலம் கடந்தவை. அவற்றிலிருந்து நல்ல உற்பத்திகளை எதிர்பார்க்க முடியாது. எனினும், மிக நல்ல நிலையில்

காணப்படுபவையும் உள்ளன. நெசவாளர்களது வருமானம் மிகக் குறைந்த நிலையிலேயே இருப்பதனால், பெண்களால் அது கவரப்படுவது குறைவாகும்.

நெசவுக் கைத்தொழிலின் சில உற்பத்திகள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளது மனங்களைக் கவரக்கூடியவை. எனவே, வெளிநாட்டுச் செலாவணியை உழைப்பதற்கும், பெண்களுக்கான வேலைவாய்ப்புக்களை வழங்கவும் முடியுமான இந்தக் கைத்தொழிலைக் கட்டியெழுப்புவது அவசியமாகும். நெசவு உற்பத்திகளது சந்தைப்படுத்தலை அரச துறை மூலம் நடத்துவது பயனில்லை எனத் தெரிகின்றது. எனவே, சுற்றுலாத் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து, தனியார் துறையினரது ஒத்துழைப்புடன் துணிவகைகளின் சந்தைப்படுத்தலை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. நெசவுக் கைத்தொழிலைக் கட்டியெழுப்பத் தேவையான நடவடிக்கைகளுக்கென ரூ.10 மில்லியனை ஒதுக்குவது பொருத்தமென முன்மொழிகின்றேன்.

## கிராம அபிவிருத்தி

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மூலம் கிராமத்தின் முன்னேற்றத்துக்கெனப் பாரிய வேலைகளை மேற்கொள்ள முடியும். கிராமத்தின் தேவைகளை இனங்கண்டு அவற்றை நிறைவேற்றி வைப்பது இந்தச் சங்கங்களது பொறுப்பாகும். கிராம அபிவிருத்திக்கென ஒதுக்கப்படும் நிதியின் மூலம் கிராமங்கள் சார்ந்த சிறிய பாதைகள், சிறிய பாலங்கள், மதகுகள், விவசாய வழிகள், கிராமியச் சந்தை வசதிகள், மயானங்கள், நூலகங்கள், குடிநீர் வழங்கல்கள் போன்ற கருமங்களை மையப்படுத்திக் கிராமிய மக்களது நலன்களை உயர்த்துவது மற்றும் வாழ்க்கைக்கான நடவடிக்கைகளை இலகுபடுத்துவது போன்ற திட்டங்களைச் செயற்படுத்த உத்தேசித்துள்ளேன். மேலும், மாகாணத்துக்குள் வீட்டுத் திட்டங்களையோ அல்லது கிராமிய மட்டத்தில் ஏனைய திட்டங்களையோ செயற்படுத்தும்போது அவற்றுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி, மிக முக்கியமான திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன. இவற்றுக்கென ரூ. 20 மில்லியனை இந்தக் கௌரவ சபையில் முன்மொழிகின்றேன்.

## விளையாட்டு விவகாரம்

மாகாணத்தின் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளைத் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுவருவதற்கு உதவுதல், மாகாண மக்களை விளையாட்டு மற்றும் தேகாரோக்கிய விடயங்களில் ஈடுபட வைத்து, திடகாத்திரமான மக்களைத் தோற்றுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது இந்தப் பிரிவின் நோக்கமாக உள்ளதுடன், இதற்கென ரூ. 17 மில்லியனை ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## இளைஞர் மற்றும் மகளிர் விவகாரம்

மாகாணத்தின் இளைஞர் யுவதிகளதும் மகளிரதும் முன்னேற்றம் கருதிச் செயற்பட்டு, அவர்களது வீடுகளிலும் சமூகத்திலும் அபிவிருத்தச் செயற்பாடுகளில் ஈடுபட வைத்து, பயன்தரும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும், இளைஞர் யுவதிகள் வழிதவறிச் செல்வதைத் தவிர்க்கவும் நடவடிக்கை மேற்கொள்வது அவசியமாகின்றது. குறிப்பாக அபாயகரமான ஔடதங்கள் பாவனையைத் தவிர்த்தல், இளைஞர் யுவதிகளுக்கான தொழிற் பயிற்சி, வாழ்க்கைத் தேர்ச்சிகளது அபிவிருத்தி, மனை நிருவாகம் போன்ற வேலைத்திட்டங்கள் இதன் மூலம் செயற்படுத்தப்படவுள்ளன. இங்கு, அந்தந்த செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது மாகாணத்தின் நிபுணத்துவ அறிவைப்பெற்ற வளவாளர்களது சேவையைப் பெற்றுக்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இளைஞர் விவகாரத்துக்கென ரூ. 9.0 மில்லியனையும், மகளிர் விவகாரத்துக்கென ரூ. 5.0 மில்லியனையும் ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன். கைத்தொழில்கள், நெசவுத் தொழில், மகளிர் விவகார அமைச்சின் விடயத் தலைப்பின் கீழ் வரும் அவசர அபிவிருத்தி வேலைகளுக்கென ரூ.1.0 மில்லியனையும், மூலதனச் சொத்துக்களது புனரமைப்புக்கென ரூ. 2.0 மில்லியனையும் ஒதுக்கித்தர முன்மொழிகின்றேன்.

## நிருமாண நடவடிக்கைகள்

மாகாண சபை மூலம் அல்லது ஏனைய மூலாதாரங்கள் மூலம் பெறப்படும் நிதியைப் பயன்படுத்தி நிருமாணிக்கப்பட்டுள்ள அல்லது குறை நிருமாணமுள்ள, எவ்வித பயன்பாட்டுக்கும் எடுக்கப்படாத கட்டடங்கள் ஏதேனும் அமையங்களது பொறுப்பில் உள்ளனவெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு அரைகுறையாக நிருமாணிக்கப்பட்டுள்ள கட்டடங்களது வேலையை நிறைவு செய்து, பயன்படுத்த முடியுமாயின் மாத்திரம் அவற்றைப் பூரணப்படுத்தவும், பயன்பாட்டுக்கு எடுக்கப்படாத கட்டடங்கள் இருப்பின் அவற்றைப் பொருத்தமான அமையங்களுக்கெனக் கையேற்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவதுடன், எதிர்வரும் வருடத்தில் சரியான ஆய்வுகளை நடத்தாமல் கட்டடங்கள் நிருமாணம் செய்யும் எதிர்பார்ப்பு இல்லை. அத்தியாவசியமான கட்டடங்களுக்கான நிருமாணம் மட்டுமே மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும், எதிர்வரும் வருடத்தில் செயற்படுத்தப்படவுள்ள அபிவிருத்தி முன்மொழிவுகளை உரிய காலத்துக்குள்ளேயே நிறைவு செய்யவும், வருட இறுதி வரும்வரை காத்திராது நிதியைக் கொடுப்பனவு செய்து முடிக்கத் திட்டமிடவும், எஞ்சிய வேலைகளைத் தவிர வேலைகளைக் குறைவேலையாக ஆக்காது இருக்கவும் வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றேன்.

கௌரவ தலைவர் அவர்களே, கௌரவ அமைச்சர்களே, கௌரவ
எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, கௌரவ உறுப்பினர்களே,

இதுவரை நான் மாகாணத் திறைசேரிக்கு வரவிருக்கும் நிதியை, அந்தந்த நடவடிக்கைக்கென ஒதுக்கும் வழிகள் பற்றிய விபரங்களை முன்வைத்தேன். இந்த நிதித் தொகை அந்தந்த அமையங்கள் மூலம் மக்களைச் சென்றடைவதற்கான சேவைகளை உச்ச மட்டத்தில் வழங்கப் போதாமலுள்ளது என்பதனை நான் அறிவேன். எனினும், 2014 ஆம் ஆண்டைவிட 2015 ஆம் ஆண்டில் ஓரளவு அதிகமான தொகையை வழங்க

முயற்சித்துள்ளேன். அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களது கடமை என்னவெனில், இந்த ஒதுக்கீடுகளை மக்களது நலன்கள், பொருளாதார மட்டம், சமூக நலன் மற்றும் கலாசாரம் போன்றவற்றை மேலோங்கச் செய்வதற்கும், நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியை உயர்த்துவதற்கும், மாகாணத்தின் பங்களிப்பை அதிகரிப்பதற்கும் இயலுமான வழியில் பொருத்தமான முன்மொழிவுகளையும், திட்டங்களையும் தயாரித்து, சிறந்த முகாத்துவத்துடனும், வெளிப்படையாகவும் செயற்படுவதாகும்.

**கௌரவ தலைவர் அவர்களே,**

இந்த வகையில் நாம் ஒதுக்கித்தரும் தொகையைவிட அதிக அளவான தொகையை அதிமேதகு சனாதிபதி அவர்களது ஆலோசனைக்கமைய, நடுவண் அரசு, அமைச்சுக்களிலிருந்தும் வேறு செயற்றிட்டங்களிலிருந்தும் எமது மாகாணத்துக்குக் கிடைக்கும். இதன் மூலம் உரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை எமது அலுவலர்கள் மூலமே நிறைவேற்றுதல் வேண்டும். குறித்த செயற்றிட்டங்களை உரிய காலத்துக்குள் நிறைவேற்றி நிதியைக் குறைநிரப்பிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தலைவர் அவர்களே,**

மாகாணத்தின் முன்னேற்றம் கருதி விசேட கவனம் செலுத்தும் மகாநாயக்கர்கள், மகிமைக்குரிய சங்கத்தினர் மற்றும் ஏனைய சமயத் தலைவர்களது வழிகாட்டல்கள், ஆலோசனைகளுக்கு எனது கௌரவமான நன்றிகளை முதலில் தெரிவித்துக் கொள்கினறேன். எமது மாகாண நடவடிக்கைகளில் நிதமும் அக்கறையுடன் இருந்து அபிவிருத்திக் கருமங்களின்போது ஆர்வம் காட்டும், எமக்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிவரும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு எனது கௌரவமான நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். மேலும், மாகாண சபையின் அனைத்து நடவடிக்கைகள் மீது நிதமும் கவனம் செலுத்தி

எம்மைச் சரியான திசையில் செல்ல உற்சாகம் வழங்கும் கௌரவ ஆளுநர் டிக்கிரி கொப்பெகடுவ அவர்களுக்கு எனது கௌரவமான நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

எமது மாகாண சபையை வழிநடத்தி, அதன் செயற்பாடுகளைச் சரியாக மேற்கொண்டுவரும் கௌரவ தலைவர் அவர்களுக்கும், உபதவைரருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், அபிவிருத்திச் செயற்பாடுகளைப் போன்றே நாம் மேற்கொள்ளவேண்டிய கருமங்களையும் சரியான வழியில் மேற்கொள்ள ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன்வைக்கும் எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர் குழுவுக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.

மேலும் மாகாணசபையின் ஒட்டுமொத்த அரச ஊழியர்களையும் வழிநடத்தி, நிதி முகாமை, நல்லாட்சி என்பவற்றுக்கான பணிகளில் ஈடுபடும் பிரதம செயலாளர், ஆளுநர் செயலாளர், அரச சேவைகள் ஆணையத்தின் செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து அரச அலுவலர்களுக்கும், எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

மத்திய மாகாண சபையின் செயலாளர், உதவிச் செயலாளர் உள்ளிட்ட சபைச் செயலகத்தின் பணியாட் குழுவினர் ஆற்றும் உயர் பணியை மதித்து அவர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

எமது அபிவிருத்தி முன்மொழிவுகளில் அதிகமானவற்றைச் செயற்படுத்தும் நகர பிதாக்கள், பிரதேச சபைகளது தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மூவர் மற்றும் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அவர்களது பணியாட் குழுவினருக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.

மாகாண சபையின் நடவடிக்கைகளை மக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் முன்வைக்கும் மற்றும் புதிய ஆலோசனைகளை முன்வைத்து ஒத்துழைப்பு வழங்கும் எமது ஊடகத்துறை அன்பர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

எமக்குப் பாதுகாப்பு வழங்கி ஆற்றும் சேவைக்கெனக் குண்டசாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட அனைத்து பாதுகாப்பு அலுவலர்க்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இறுதியாக, எமது எதிர்கால நடவடிக்கைகளை வெற்றிகரமாக ஆக்கிக் கொளவதற்கென கௌரவ தலைவர் அவர்கள் உள்ளிட்ட உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றேன்.

**உங்கள் அனைவருக்கும் தலதாவின் மகிமை கிட்டுக.**

**சரத் ஏகக்நாயக்க**
முதலமைச்சர்
மத்திய மாகாண சபை
பள்ளேகலை.
2014.11.04.

# மூலதன முதலீட்டு வேலைத்திட்டம் - 2015

## சுருக்கம்

ரூ. மில்லியன்

| தொடர் இல. | செயற்றிட்டம் / வேலைத்திட்டம் | மாகாண நிலையான | உபமானியப் பங்களிப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | ஆளுநர் அலுவலகம், சபைச் செயலர் அலுவலகம் மற்றும் மாகாண அரச சேவைகள் ஆணையம் | - | 20.80 | 20.80 |
| 2 | பிரதம செயலர் அலுவலகம் | 112.00 | 395.30 | 507.30 |
| 3 | முதலமைச்சு | 812.92 | 32.90 | 845.82 |
| 4 | சுகாதார அமைச்சு | 1,016.21 | 16.50 | 1,032.71 |
| 5 | கைத்தொழில் அமைச்சு | 77.00 | 10.00 | 87.00 |
| 6 | விவசாய அமைச்சு | 155.00 | 15.00 | 170.00 |
| 7 | வீதி அபிவிருத்தி அமைச்சு | 1,706.22 | 9.50 | 1,715.72 |
| | **முழு மொத்தம்** | **3,879.35** | **500.00** | **4,379.35** |

# மூலதன முதலீட்டு வேலைத்திட்டம் - 2015

மூலதன முதலீட்டு வேலைத்திட்டம் - 2015

## பிரதம செயலர் அலுவலகம்

ரூ. மில்லியன்

| தொடர் இல. | செயற்றிட்டம் / வேலைத்திட்டம் | மாகாண நிலையான | உபமானியப் பங்களிப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | கௌரவ உறுப்பினர்களது பன்முகப்படுத்திய வரவு செலவு | | 145.00 | 145.00 |
| 2 | எஞ்சிய வேலைத்திட்டங்கள் | | 6.00 | 6.00 |
| 3 | விசேட செயற்றிட்டம் (சமநிலைப் பொருளாதார அபிவிருத்திச் செயற்றிட்டம்) | 50.00 | - | 50.00 |
| 4 | பயிற்சித் திட்டங்கள் | | 11.50 | 11.50 |
| 5 | கணக்கீடு அபிவிருத்தி | | 8.00 | 8.00 |
| 6 | வாகனங்களது குத்தகை வரி செலுத்துகை | | 189.00 | 189.00 |
| 7 | மாகாண இறைவரித் திணைக்களம் | | 0.30 | 0.30 |
| 8 | அரச அலுவலர்களது குடிமனைகள் திருத்தம் / நிருமாணம் | | 30.00 | 30.00 |
| 9 | பின்தங்கிய, தனிமைப்பட்ட கிராமங்களது அபிவிருத்தி | 62.00 | - | 62.00 |
| 10 | அவசர அபிவிருத்தி வேலைகள் | | 1.50 | 1.50 |
| 11 | மூலதன சொத்துகள் புனரமைப்பு நிலையான சொத்துகள் கையேற்பு | | 4.00 | 4.00 |
| | **மொத்தம்** | **12.00** | **395.30** | **507.30** |

## மூலதன முதலீட்டு வேலைத்திட்டம் - 2015

**நிதி, திட்டமிடல், சட்டம், சமாதானம், உள்ளூராட்சி, மனிதவலு, கல்வி, கலாசார விவகாரம், சுற்றுலா, போக்குவரத்து, காணி, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தக, வாணிபம் உணவு வழங்கல் மற்றும் விநியோகம், மூலதன ஒன்றிணைப்பு அமைச்சு**

ரூ. மில்லியன்

| தொடர் இல. | செயற்றிட்டம் / வேலைத்திட்டம் | மாகாண நிலையான | உபமானியப் பங்களிப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | கல்வி அபிவிருத்தித் திட்டம் | | - | - |
| | உலகவங்கி நிதியுதவி | 340.07 | - | 340.07 |
| | திரட்டிய நிதியம் | 144.00 | 1.00 | 145.00 |
| | கண்டி பதியுதீன் மஹ்மூத் பெண்கள் கல்லூரி அபிவிருத்தி (பாகிஸ்தான் நிதியுதவி) | 0.85 | - | 0.85 |
| | நணோதா வேலைத்திட்டம் | 52.00 | - | 52.00 |
| | பாடசாலை உபகரணங்கள், தளபாடங்கள் திருத்தம் | 5.00 | - | 5.00 |
| | பாடசாலைக் குடிமனைகளது திருத்தமும் நிருமாணமும் | 6.00 | - | 6.00 |
| 2 | காணி அபிவிருத்தித் திட்டம் | 5.00 | - | 5.00 |
| 3 | காணிக் கையேற்பு | | 3.00 | 3.00 |
| 4 | மகாவலி கையேற்ற சொத்துக்களது பராமரிப்பு | 7.00 | - | 7.00 |
| 5 | உள்ளூராட்சி அமையங்களது சேவைகள் | | - | - |
| | திண்மக் கழிவுப்பொருள் முகாமை | 24.00 | - | 24.00 |
| | வார சந்தைகள் அபிவிருத்தி | 14.00 | - | 14.00 |
| | பிரசைகள் குடிநீர் வழங்கல் | 14.00 | - | 14.00 |
| | தகனசாலைகள் நிருமாணம் | 15.00 | - | 15.00 |
| | உள்ளூராட்சி அமையங்களது கொள்ளளவு அபிவிருத்தி | 1.00 | - | 1.00 |
| 6 | உள்ளூராட்சிப் பாதைகள் அபிவிருத்தி | 139.00 | - | 139.00 |
| 7 | முன்பள்ளிப் பருவ அபிவிருத்தி | 5.00 | - | 5.00 |
| 8 | கலாசாரஅபிவிருத்தித் திட்டம் | 4.00 | - | 4.00 |
| 9 | சுற்றுலா, வர்த்தக, வாணிப விவகாரங்கள் | 32.00 | - | 32.00 |
| 10 | கூட்டுறவு அபிவிருத்தி | 5.00 | - | 5.00 |
| 11 | கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு | - | 0.40 | 0.40 |
| 12 | வாகனக் கொள்வனவு | - | 16.00 | 16.00 |
| 13 | அவசர அபிவிருத்தி வேலைகள் | - | 1.50 | 1.50 |
| 14 | மூலதன சொத்துகள் புனரமைப்பு நிலையான சொத்துகள் கையேற்பு | - | 11.00 | 11.00 |
| | **மொத்தம்** | **812.92** | **32.90** | **845.82** |

## மூலதன முதலீட்டு வேலைத்திட்டம் - 2015

### சுகாதார, சுதேச வைத்தியம், சமூக நலனோம்பல், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சு

ரூ. மில்லியன்

| தொடர் இல. | செயற்றிட்டம் / வேலைத்திட்டம் | மாகாண நிலையான | உபமானியப் பங்களிப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | சுகாதார சேவைகள் | | | |
| 2 | உலகவங்கி நிதியுதவி | 355.00 | | 355.00 |
| 3 | திரட்டிய நிதியம் | 190.00 | 1.00 | 191.00 |
| 4 | **JICA** சமூக அபிவிருத்தி நடவடிக்கைகள் (மருத்துவ மனைகள்) | 420.00 | - | 420.00 |
| 5 | கண்டி ஸியா மருத்துவமனை அபிவிருத்தி (பாக்கிஸ்தான் நிதியுதவி) | 2.21 | - | 2.21 |
| 6 | ஆயுர்வேத திணைக்களம் | 23.00 | 1.00 | 24.00 |
| 7 | நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் | 14.00 | | 14.00 |
| 8 | வாகனக் கொள்வனவு | | 7.00 | 7.00 |
| 9 | சமூக சேவைகள் | 12.00 | | 12.00 |
| 10 | அவசர அபிவிருத்தி வேலைகள் | | 1.50 | 1.50 |
| 11 | மூலதன சொத்துகள் புனரமைப்பு நிலையான சொத்துகள் கையேற்பு | | 6.00 | 6.00 |
| | **மொத்தம்** | **1,016.21** | **16.50** | **1,032.71** |

## மூலதன முதலீட்டு வேலைத்திட்டம் - 2015

## விவசாயம், சிறிய நீர்ப்பாசனம், விலங்குவள உற்பத்தி, சுகாதாரம், கமநல அபிவிருத்தி, மீன்பிடி, சுற்றாடல் விவகாரம், இந்து கலாசாரம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

ரூ. மில்லியன்

| தொடர் இல. | செயற்றிட்டம் / வேலைத்திட்டம் | மாகாண நிலையான | உபமானியப் பங்களிப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | விவசாய அபிவிருத்தி | 50.00 | 1.00 | 51.00 |
| 2 | விவசாயப் பாதைகள் அபிவிருத்தி | 7.00 | | 7.00 |
| 3 | சிறிய நீர்ப்பாசனங்கள் அபிவிருத்தி | 24.00 | | 24.00 |
| 4 | விலங்கு வளர்ப்பு சுகாதார நடவடிக்கைகள் | 32.00 | | 32.00 |
| 5 | நன்னீர் மீன்பிடி | 7.00 | | 7.00 |
| 6 | சுற்றாடல் அபிவிருத்தி வேலைத்திட்டம் | 2.00 | 3.50 | 5.50 |
| 7 | இந்து கலாசாரம் | 1.00 | 1.00 | 2.00 |
| 8 | பெருந்தோட்டப் பாதைகள் அபிவருத்தி | 32.00 | | 32.00 |
| 9 | வாகனக் கொள்வனவு | | 7.00 | 7.00 |
| 10 | அவசர அபிவிருத்தி வேலைகள் | | 1.50 | 1.50 |
| 11 | மூலதன சொத்துகள் புனரமைப்பு நிலையான சொத்துகள் கையேற்பு | | 1.00 | 1.00 |
| | **மொத்தம்** | **155.00** | **15.00** | **170.00** |

## மூலதன முதலீட்டு வேலைத்திட்டம் - 2015
## வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சாரம், சக்திவளம், வீடமைப்பு நிருமாண அமைச்சு

ரூ. மில்லியன்

| தொடர் இல. | செயற்றிட்டம் / வேலைத்திட்டம் | மாகாண நிலையான | உபமானியப் பங்களிப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | மாகாணப் பாதைகள் அபிவிருத்தி | 291.00 | | **291.00** |
| 2 | கிராமிய மாற்று சக்திவள அபிவிருத்தி | 15.00 | | **15.00** |
| 3 | போக்குவரத்து அபிவிருத்தி | 24.00 | | **24.00** |
| 4 | வீடமைப்பு அபிவிருத்தித் திட்டம் | 5.00 | | **5.00** |
| 5 | வாகனக் கொள்வனவு | | 7.00 | **7.00** |
| 6 | வீதி அபிவிருத்தித் திட்டம் (**JICA**) | 1,371.22 | | **1,371.22** |
| 7 | அவசர அபிவிருத்தி வேலைகள் | | 1.50 | **1.50** |
| 8 | மூலதன சொத்துகள் புனரமைப்பு நிலையான சொத்துகள் கையேற்பு | | 1.00 | **1.00** |
| | **மொத்தம்** | **1,706.22** | **9.50** | **1,715.72** |

# மூலதன முதலீட்டு வேலைத்திட்டம் - 2015

## விளையாட்டு, இளைஞர் விவகாரம், மகளிர் விவகாரம், கிராம அபிவருத்தி மற்றும் கைத்தொழில் அமைச்சு

ரூ. மில்லியன்

| தொடர் இல. | செயற்றிட்டம் / வேலைத்திட்டம் | மாகாண நிலையான | உபமானியப் பங்களிப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | சிறு கைத்தொழில்கள் அபிவிருத்தி, வர்த்தக மேம்பாடு, தொழிற் பயிற்சி | 16.00 | | 16.00 |
| 2 | இளைஞர் விவகாரம் | 9.00 | | 9.00 |
| 3 | நெசவுக் கைத்தொழில் அபிவிருத்தி | 10.00 | | 10.00 |
| 4 | விளையாட்டு விவகாரம் | 17.00 | | 17.00 |
| 5 | கிராம அபிவிருத்தி | 20.00 | | 20.00 |
| 6 | மகளிர் விவகாரம் | 5.00 | - | 5.00 |
| 7 | வாகனக் கொள்வனவு | | 7.00 | 7.00 |
| 8 | அவசர அபிவிருத்தி வேலைகள் | | 1.00 | 1.00 |
| 9 | மூலதன சொத்துகள் புனரமைப்பு நிலையான சொத்துகள் கையேற்பு | | 2.00 | 2.00 |
| | **மொத்தம்** | **77.00** | **10.00** | **87.00** |